சோமேசர் முதுமொழி வெண்பா

உ

திருச்சிற்றம்பலம்

குளத்தூர்ச்

சோமேசர் முதுமொழி வெண்பா

காப்பு

மதுவளரும் பூஞ்சடில மல்குசோ மேசர்
முதுமொழிவெண் பாவை மொழியப்—பொதுளு
மடம்பிடுங்கி யன்பர்க்கு வான்வீ டளிக்குங்
கடம்பொழி முக்கட் களிறு.

நூல்

க. கடவுள்வாழ்த்து

சீர்கொளிறை யொன்றுண்டத் தெய்வநீ யென்றெப்பாற்
சோர்விலடை யாற்றெளிந்தோஞ் சோமேசா—வோரில்
அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

உ. வான்சிறப்பு

நேய புகழ்த்துணையார் நீராட்டுங் கைதளர்ந்துன்
றூயமுடி மேல்வீழ்ந்தார் சோமேசா—வாயுங்கால்
தானர் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்.

௩ நீத்தார்பெருமை

அத்திரவாக் காற்புத்தன் சென்னியறுத் தார்சண்பைச்
சுத்தனர் தம்மன்பர் சோமேசா—நித்த
நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

௪ அறன்வலியுறுத்தல்

தக்கனர் வேள்வித் தவத்தைமேற் கொண்டிருந்துந்
தொக்கவற மாயிற்றே சோமேசா—மிக்க
அழுக்கா றவாவெகுளி யின்னச்சொன் னன்கு
மிழுக்கா வியன்ற தறம்.

௫ இல்வாழ்க்கை

இல்வாழ் தரும னியற்சந் திரசேனன்
றெல்வார்த்தை கீழ்ப்படுத்தான் சோமேசா—நல்ல
இயல்பின னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை.

௬ வாழ்க்கைத்துணைநலம்

மூவர் தடுப்பவுங்கொண் மூவைப் பணிகொண்டா
யே வனசூயை சோமேசா—மேவுபிற
தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை.

௭ புதல்வரைப்பெறுதல்

பாடினர்மூ வாண்டினிற்சம் பந்தரென யாவோருஞ்
சூடு மகிழ்ச்சிமெய்யே சோமேசா—நாடியிடில்
தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது.

அ அன்புடைமை

தோன்ற வகைகரந்துந் தோன்றலைக்கண் ணெகிழ்ந்து
தோன்றநின்றான் முன்புநளன் சோமேசா—தோன்றுகின்ற
அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்
புன்கணீர் பூச றரும்.

௯ விருந்தோம்பல்

பொன்னனையா ளன்பருக்கே போனகமீந் தன்னருளாற்
சொன்னமிகப் பெற்றாளே சோமேசா—பன்னில்
வருவிருந்து வைகலு மோம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுத லின்று.

௰ இனியவைகூறல்

இன்சொ லிராம னியம்ப விரேணுகைசேய்
துன்பமொழி யேபுகன்றான் சோமேசா—வன்புடைய
இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.

௧௧ செய்ந்நன்றியறிதல்

பன்னு மசதிநன்றி பாராட்டிக் கோவைநூல்
சொன்னாளே யௌவைமுன்பு சோமேசா—மன்னாத்
தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்றெரி வார்.

௧௨ நடுவுநிலைமை

வேதியனா ளாமோவென் றெள்ளாது வெண்ணெய்நல்லூர்ச்
சோதிவழக் கேபுகழ்ந்தார் சோமேசா— வோதிற்
சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி.

௧௩ அடக்கமுடைமை

எல்லா முணர்ந்தும் வியாத னியம்பியவச்
சொல்லாலே காவயர்ந்தான் சோமேசா—வல்லமையால்
யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

௧௪ ஒழுக்கமுடைமை

தீயனவே சொல்லுஞ் சிசுபாலன் முன்புகண்ணன்
றூயதலாச் சொல்லுரையான் சோமேசா—வாயின்
ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்.

௧௫ பிறனில்விழையாமை

ஆன்றவெழிற் சீதையைவேட் டைந்நான்கு திண்கரத்தான்
ஶ்ரேன்றபழி மாறிலனே சோமேசா—வேன்ற
பகைபாவ மச்சம் பழியென நான்கு
மிகவாவா மில்லிறப்பான் கண்.

௧௬ பொறையுடைமை

ஒட்டலன்செய் தீமைக் கொருதுநம ரென்றுரைத்தார்
சுட்டியசீர் மெய்ப்பொருளார் சோமேசா—முட்ட
ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.

௧௭ அழுக்காறுமை

அன்பரைக் கண்டழுக்கா றுஞ்சமணர் தம்வாயாற்
றன்பமுற்றார் வெங்கழுவிற் சோமேசா—வன்பாம்
அழுக்கா றுடையார்க் கதுசாலு மொன்னார்
வழுக்கியுங் கேடீன் பது.

௧௮ வெஃகாமை

நினைபிடே கப்பழத்தை நீண்மறையோர்க் கீந்தவிறை
துன்னுகுடி யோடழிந்தான் சோமேசா—பன்னில்
நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்
குற்றமு மாங்கே தரும்.

௧௯ புறங்கூறாமை

கூனியிரா மன்பிரிந்து போமாறே கூறினளே
தூநறும்பூங் கொன்றையணி சோமேசா—தானே
பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாட றேற்றா தவர்.

௨௰ பயனிலசொல்லாமை

சேக்கிழார் சிந்தா மணிப்பயிற்சி தீதெனவே
தூக்கியுப தேசித்தார் சோமேசா—நோக்கிற்
பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல்.

௨௧ தீவினையச்சம்

குற்றொருவர்க் கூறைகொண்டு கொன்றதிம்மை யேகூடல்
சொற்றதுகை கண்டோமே சோமேசா—வற்றான்
மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு.

௨௨ ஒப்புரவறிதல்

பண்டைவினை வெண்ணிநொந்தார் பாகஞ்செய் மாறராந்
தொண்டர் மனைவியார் சோமேசா—கண்டோ
நயனுடையா னல்கூர்ந்தா னாதல் செயுநீர
செய்யா தமைகலா வாறு.

௨௩ ஈகை

மீளென் றுரைப்பளவு மிக்குவகை பெற்றிலர்வன்
றோள ரியற்பகையார் சோமேசா—நீளுலகில்
இன்னா திரக்கப் படுத லிரந்தவ
ரின்முகங் காணு மளவு.

௨௪ புகழ்

போசன் கவிஞருக்கே போதப் பரிந்தளித்துத்
தூசிலாக் கீர்த்திகொண்டான் சோமேசா—வாசையுடன்
ஈத லிசைபட வாழ்த லதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு.

௨௫ அருளுடைமை

மூர்த்திபால் வன்கண்மை மூண்ட வடுகரசன்
சூர்த்திறத்தா னுய்ந்தானே சோமேசா—கூர்த்த
பொருளற்றார் பூப்ப ரொருகா லருளற்றா
ரற்றார்மற் றாத லரிது.

௨௬ புலான்மறுத்தல்

மச்சஞ் சுமந்துய்ப்ப வானோர்ப் பணிகொண்டான்
றுச்சனுஞ் சூரபன்மன் சோமேசா—நிச்சயமே
தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பா
னெங்ஙன மாளு மருள்.

௨௭ தவம்

ஏர்மணநல் லூர்ச்சுடருள் யாருமணு கச்சிலர்தாந்
தூரநெறி நின்றயர்ந்தார் சோமேசா—வோரில்
தவமுந் தவமுடையார்க் காகு மவமதனை
யஃதிலார் மேற்கொள் வது.

உ௮ கூடாவொழுக்கம்

மாயனவ்வே டங்கொண்டே வன்சலந்த ரன்கிழத்தி
தூய நலங்கவர்ந்தான் சோமேசா—வாயின்
வலியி னிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்றோல் போர்த்துமேய்ந் தற்று.

உகூ கள்ளாமை

காய்வாற் களவினுன் ஞாலமிக ழப்பட்டான்
றூயனுங் காதிமகன் சோமேசா—வாயதனுல்
எள்ளாமை வேண்டுவா னென்பா னெனைத்தொன் றுங்
கள்ளாமை காக்கதன் னெஞ்சு.

௩௰ வாய்மை

பிள்ளையுட னுண்ணப் பேசியமைத் தாரன்பு
துள்ளு சிறுத்தொண்டர் சோமேசா—வுள்ளுங்காற்
பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்.

௩௧ வெகுளாமை

பல்லவர்கோன் வந்து பணியக் கருணைசெய்தார்
தொல்லைநெறி வாகீசர் சோமேசா—கொல்ல
இணரெரி தோய்வன்ன வின்னு செயினும்
புணரின் வெகுளாமை நன்று.

௩௨ இன்னுசெய்யாமை

பிள்ளையார் வைப்பினிற்றீப் பெய்வித்த மீனவன்றீத்
துள்ளுவெப்பு நோயுழந்தான் சோமேசா—வெள்ளிப்
பிறர்க்கின்னு முற்பகற் செய்யிற் றமக்கின்னு
பிற்பகற் றூமே வரும்.

சோமேசர் முதுமொழி வெண்பா

௩௩ கொல்லாமை

வேந்துமகற் றேர்க்கால் விடலஞ்சி மந்திரிதான்
சோர்ந்துதன தாவிவிட்டான் சோமேசா—வாய்ந்துணர்ந்தோர்
தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை.

௩௪ நிலையாமை

ஆக்கையு மாயிரத்தெட் டண்டங் களுநிலையாத்
தூக்கியழிந் தான்சூரன் சோமேசா—நோக்கியிடில்
நில்லாத வற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை.

௩௫ துறவு

கோவணமொன் றிச்சிப்பக் கூடினவே பந்தமெல்லாந்
தூவணஞ்சேர் மேனியாய் சோமேசா—மேவில்
இயல்பாகு நோன்பிற்கொன் றின்மை யுடைமை
மயலாகு மற்றும் பெயர்த்து.

௩௬ மெய்யுணர்தல்

காரிகையா ரைப்பொன்னைக் காட்டவுங்கா மாதிமும்மைச்
சோர்விழந்துய்ந் தாரரசர் சோமேசா—வோருங்காற்
காமம் வெகுளி மயக்க மிவைமூன்ற
னாமங் கெடக்கெடு நோய்.

௩௭ அவாவறுத்தல்

தாய்கருவில் வாழ்குழவி தாமெல்லாம் வேண்டுவது
தூயபிற வாமையொன்றே சோமேசா—வாயதனால்
வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்.

௩அ ஊழ்

முன்ன ரமண்மதத்து மூண்டரசர் பின்சைவந்
துன்னியது மென்வியப்போ சோமேசா—வுன்னுங்காற்
பேதைப் படுக்கு மிழவூ ழறிவகற்று
மாகலூ ழுற்றக் கடை.

௩௯ இறைமாட்சி

பார்சீதை சீலம் பழித்துரைத்துங் காகுத்தன்
சோர்வுறமுன் சீறிலனே சோமேசா—தேறிற்
செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கு முலகு.

௪0 கல்வி

சம்பந்தர் நாவரசர் பாற்கண்டோஞ் சார்ந்துவப்ப
தும்பிரிவி னுள்ளுவதுஞ் சோமேசா—நம்பி
உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரித
லனைத்தே புலவர் தொழில்.

௪௧ கல்லாமை

மெய்த்ததிரு வள்ளுவனார் வென்றுயர்ந்தார் கல்விநலந்
துய்த்தசங்கத் தார்தாழ்ந்தார் சோமேசா—வுய்த்தறியின்
மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் பாடு.

௪௨ கேள்வி

ஊனுக்கூ னென்னு முரைகண் டுவந்தனரே
ஞானசீர்க் கண்ணப்பர் சோமேசா—வானதனாற்
கற்றில னாயினுங் கேட்க வஃதொருவற்
கொற்கத்தி னூற்றாந் துணை.

௪௩ அறிவுடைமை

அன்றமணர் நீவைப்ப வஞ்சியதென் னென்னன்மின்
றுன்றியசீர்ச் சம்பந்தர் சோமேசா—நன்றேயாம்
அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ
தஞ்ச லறிவார் தொழில்.

௪௪ குற்றங்கடிதல்

ஈரைந் தலையா னணுகியபின் னேகலுற்றுச்
சூரர் தொலைந்தானே சோமேசா—வோரின்
வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை யெரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.

௪௫ பெரியாரைத்துணைக்கோடல்

எத்திறமு மேயர்கோ னட்பாமா றெண்ணினரே
சுத்தநெறி யாரூரர் சோமேசா—வைத்த
அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

௪௬ சிற்றினஞ்சேராமை

அற்கா வமண்மொழிகேட் டல்லலுற்றுன் மாறனில்லான்
சொற்கேட்டு நோய்தீர்ந்தான் சோமேசா—தற்காக்கு
நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தி
னல்லற் படுப்பதூஉ மில்.

௪௭ தெரிந்துசெயல்வகை

சானகியை யிச்சித்துத் தன்னுயிரும் போக்கினனே
தூநீ ரிலங்கையர்கோன் சோமேசா—வானதனுல்
ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை
யூக்கா ரறிவுடை யார்.

சஅ வலியறிதல்

சக்கரத்தை யேற்பன் சலந்தரனு னென்றெடுத்துத்
துக்கமுற்று வீடினனே சோமேசா—வொக்கும்
உடைத்தம் வலியறியா ரூக்கத்தி னூக்கி
யிடைக்கண் முரிந்தார் பலர்.

சகூ காலமறிதல்

வீமனவை முன்மனையை வேட்டானைக் கண்டுமொரு
தூமொழியே னும்புகலான் சோமேசா—வாமென்றே
ஊக்க முடையா னொடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து.

ருய இடனறிதல்

காட்டு முயலுங் கதக்கரியைக் கொல்லுமாற்
ஞேட்டலர்நீர்க் கச்சியினுட் சோமேசா—நாட்டியிடின்
ஆற்ருரு மாற்றி யடுப விடனறிந்து
போற்ருர்கட் போற்றிச் செயின்.

ருக தெரிந்துதெளிதல்

தேருமா னந்தனைமுன் றேறிப் பழிபூண்டான்
சூரியசன் மாவென்பான் சோமேசா—தாரணிமேல்
தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா விடும்பை தரும்.

ருஉ தெரிந்துவினையாடல்

தேசிகனுக் கொண்ட சுரரிறைக்குத் தீங்கிழைத்தான்
றாசார் துவட்டாச்சேய் சோமேசா—பேசில்
எனைவகையாற் றேறியக் கண்ணும் வினைவகையான்
வேருகு மாந்தர் பலர்.

ருஙு சுற்றந்தழால்

ஆர்வீ டணனொ டளவளா வாதரக்கன்
சோர்விலா வாழ்விழந்தான் சோமேசா—நேரே
அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று.

ருச போர்ச்சாவாமை

முப்புரத்தோர் வேவ வுடனிருந்த மூவரே
துப்பினாற் கண்டறிந்தார் சோமேசா—வெப்பால்
இகழ்ச்சியிற் கெட்டாரை யுள்ளுக தாந்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.

ருரு செங்கோன்மை

மைந்தனை யமலச மஞ்சன் றனைவெறுத்தான்
சுந்தரச்செங் கோற்சகரன் சோமேசா—முந்துங்
குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் றொழில்.

ருசு கொடுங்கோன்மை

ஐவரில் லாளழுத வன்றேகண் டேக்குற்றார்
துய்யகங்கை சேய்முதலோர் சோமேசா—மெய்யேயாம்
அல்லற்பட் டாற்றா தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.

ருஎ வெருவந்தசெய்யாமை

வெய்துரையா லக்கணமே வீந்தான் சிசுபாலன்
றெய்யின் முலையுமைபாற் சோமேசா—வுய்யாக்
கடுஞ்சொல்லன் கண்ணில னாயி னெடுஞ்செல்வ
நீடின்றி யாங்கே கெடும்.

ருஅ கண்ணோட்டம்

மாலான் முதலிகழ்ந்த வானவர்தீங் கும்பொறுத்துத்
தோலா விடமுண்டாய் சோமேசா—சால
ஒறுத்தாற்றும் பண்பினுர் கண்ணுங்கண் ணேடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலே.

ருகூ ஒற்ருடல்

வேதனில்லாள் வீந்ததிற மீனவற்கு நீதெரித்தாய்
சோதி பழியஞ்சுஞ் சோமேசா—பூதலத்தின்
எல்லார்க்கு மெல்லா நிகழ்பவை யெஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் ெருழில்.

சுய ஊக்கமுடைமை

வெங்கரியைப் பாகரைமுன் வீட்டினு ரேகராய்த்
துங்க வெறிபத்தர் சோமேசா—வங்கம்
பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்.

சுக மடியின்மை

பொன்மலேயின் வேங்கை பொறித்துமீண் டான்சென்னி
தொன்மைவலி யாண்மையினுற் சோமேசா—பன்னின்
மடியிலா மன்னவ னெய்து மடியளந்தான்
ருஅய தெல்லா மொருங்கு.

சுஉ ஆள்வினையுடைமை

கூற்றுவர்மூ வேந்தர் நிலமுங்கைக் கொண்டாரே
தோற்றுந்தா ளாண்மையினுற் சோமேசா—சாற்று
முயற்சி திருவினை யாக்கு முயற்றின்மை
யின்மை புகுத்தி விடும்.

௬௩ இடுக்கணழியாமை

என்றுமொரு மீனேவந் தின்மைமிக வுந்தளரார்
நன்றே ரதிபத்தர் சோமேசா—மன்ற
அடுக்கி வரினு மழிவிலா னுற்ற
விடுக்க ணிடுக்கட் படும்.

௬௪ அமைச்சு

கால்சேய் கதிர்சேயைக் காத்தரச னட்புதவித்
தாலமுடி சூட்டுவித்தான் சோமேசா—சாலப்
பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்ல தமைச்சு.

௬௫ சொல்வன்மை

நித்தியத்து வங்கேட்பா னித்திரையென் றேமயக்கந்
துய்த்தனனுங் கும்பகன்னன் சோமேசா—எத்திறத்தும்
ஆக்கமுங் கேடு மதனால் வருதலாற்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு.

௬௬ வினைத்தூய்மை

தக்கனுனை யெள்ளிமகஞ் சாடும்போ தெண்ணியெண்ணித்
துக்கமுற்று னவதென்னே சோமேசா—எக்காலும்
எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று.

௬௭ வினைத்திட்பம்

செவ்வேளைப் பாலனென வெள்ளித் திறலழிந்தான்
றுவ்வாத வெஞ்சூரன் சோமேசா—வவ்வா
றுருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்னா ருடைத்து.

சுஅ வினைசெயல்வகை

வெள்ளிவெற்பை யெண்ணு தெடுப்பனென வீறெய்தித்
துள்ளியழிந் தானரக்கன் சோமேசா—மெள்ள
முடிவு மிடையூறு முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்.

சுகூ தூது

தன்றுயர நோக்கான் றனைவிடுத்தோர்க் கேயுறுதி
துன்றமொழிந் தானிடதன் சோமேசா—என்றும்
இறுதி பயப்பினு மெஞ்சா திறைவற்
குறுதி பயப்பதாந் தூது.

எ0 மன்னரைச்சேர்ந்தொழுகல்

மாமனு னென்னு மதத்தா லுனையிகழ்ந்து
தோமுற்றார் தக்கனுர் சோமேசா—வாமே
பழைய மெனக்கருதிப் பண்பல்ல செய்யுங்
கெழுதகைமை கேடு தரும்.

எக குறிப்பறிதல்

அப்பூதி யார்மறைத்தும் வாகீச ரக்கரவைத்
துப்பா னறிந்தனரே சோமேசா—இப்புவியில்
ஐயப் படாஅ தகத்த துணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல்.

எஉ அவையறிதல்

ஓர்சங்கத் தார்கல்வி யூமைச்சேய்க் குக்காட்டிச்
சோர்வுநலந் தேர்ந்தனரே சோமேசா—வோருங்காற்
கற்றறிந்தார் கல்வி விளங்குங் கசடறச்
சொற்றெரிதல் வல்லா ரகத்து.

எ௩ அவையஞ்சாமை

வாழ்வாத வூரர் வளவனவை முன்னெதிர்த்துச்
சூழ்தே ரரைவென்றார் சோமேசா—தாழ்வகல
ஆற்றி னளவறிந்து கற்க வவையஞ்சா
மாற்றங் கொடுத்தற் பொருட்டு.

எ௪ நாடு

மேல்வளமெல் லாமமைந்தும் வீர மகேந்திரந்தான்
றேல்வியுற்று மாய்ந்ததே சோமேசா—ஞாலமிசை
ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு.

எ௫ அரண்

வல்லதிகன் றன்னரணம் வாள்வளவன் சேனைசெலத்
தொல்லைவலி மாண்டதே சோமேசா—நல்ல
எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
யில்லார்க ணில்ல தரண்.

எ௬ பொருள்செயல்வகை

உக்கிரனார் மேருவைவென் றெண்ணிதியம் பெற்றமையாற்
றொக்ககுடி காத்தனர்காண் சோமேசா—மிக்குயர்ந்த
குன்றேறி யானைப்போர் கண்டற்றாற் றன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை.

எஎ படைமாட்சி

நிரகைப்ப முப்புரமு நீறாகி மாய்ந்ததே
அரகையாள் பாலமருஞ் சோமேசா—வானின்
ஒலித்தக்கா லென்னா முவரி யெலிப்பகை
நாக முயிர்ப்பக் கெடும்.

எஅ படைச்செருக்கு

மன்மதனின் ஞெடெதிர்த்து வீறழிந்து மாண்டாலுந்
துன்னுபுக ழேபெற்றான் சோமேசா—புன்னெருக்குங்
கான முயலெய்த வம்பினில் யானை
பிழைத்தவே லேந்த லினிது.

எகூ நட்பு

வாக்கரசர் பிள்ளா யெனவலித்து மாற்றலுற்றார்
தூக்குபிள்ளை யார்செலவைச் சோமேசா—நோக்கி
நகுதற் பொருட்டன்று நட்டன் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு.

அய நட்பாராய்தல்

போற்றுஞ் சுசீலன் புயபெலனை நீத்தகன்றான்
றேற்றிறைவி தம்மிடவுஞ் சோமேசா—வேற்றதே
ஊதிய மென்ப தொருவற்குப் பேதையார்
கேண்மை யொரீஇ விடல்.

அக பழைமை

இல்லாளைப் பற்றிழுத் தென்றிடவு மன்புகுன்றார்
தொல்லைநெறி நீலகண்டர் சோமேசா—வொல்லா
தழிவந்த செய்யினு மன்பறா ரன்பின்
வழிவந்த கேண்மை யவர்.

அஉ தீநட்பு

ஆங்கா ரியந்தடுத்த வங்கனைசொற் கேட்டிறந்தான்
றூங்காத் தசரதன்றான் சோமேசா—ஏங்கிதனல்
ஒல்லுங் கரும முடற்று பவர்கேண்மை
சொல்லாடார் சோர விடல்.

அங கூடாநட்பு

தாய்நீண்டத் தூசடுத்துச் சாரெனுஞ்சொற் றீதென்று
டே சுயோதனற்குச் சோமேசா—வாயதனுல்
நட்டார்போ னல்லவை சொல்லினு மொட்டார்சொ
லொல்லை யுணரப் படும்.

அச பேதைமை

வன்சமணர் தம்பிரிவால் வாகீசர்க் கின்பமன்றித்
துன்பமென்ப தில்லையே சோமேசா—நன்காம்
பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கட்
பீழை தருவதொன் றில்.

அரு புல்லறிவாண்மை

இல்லான் மறுப்பவுஞ்சென் றேகிச் சலந்தரன்றான்
றொல்வலிபோய் மாண்டனனே சோமேசா—வல்லமையால்
ஏவவுஞ் செய்கலான் றான்றேறா னவ்வுயிர்
போஒ மளவுமோர் நோய்.

அகூ இகல்

எத்திறத்துங் கெட்டா னிகலாற் சுயோதனன்சீர்
துய்த்தனனட் பாற்றருமன் சோமேசா—மொய்த்த
இகலானு மின்னாத வெல்லா நகலானு
நன்னய மென்னுஞ் செருக்கு.

அஎ பகைமாட்சி

ஏனையர்பால் வெற்றிகொண்டா னின்னோ டெதிர்த்திறந்தான்
தூநறும்பூ வாளியான் சோமேசா—மானம்
வலியார்க்கு மாறேற்ற லோம்புக வோம்பா
மெலியார்மேன் மேக பகை.

அஅ பகைத்திறந்தெரிதல்

நந்தி கலம்பகத்தான் மாண்டகதை நாடறியுஞ்
சுந்தரஞ்சேர் தென்குளத்தூர்ச் சோமேசா—சந்ததமும்
வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை.

அகூ உட்பகை

மாற்றூர் முடியும் வளமையுங்கொண் டேகாலங்
தோற்றான் வழுதிமகன் சோமேசா—ஆற்றலிலா
எட்பக வன்ன சிறுமைத்தே யாயினு
முட்பகை யுள்ளதாங் கேடு.

கூ0 பெரியாரைப்பிழையாமை

கொன்படைக ணீறாகக் கோசிகனூர் சாபத்தாற்
றுன்பமுற்றூர் நால்வேந்தர் சோமேசா—இன்புதவும்
ஏந்திய கொள்கையார் சீறி னிடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும்.

கூக பெண்வழிச்சேறல்

கற்பின்மை யில்லாள்பாற் கண்டுமய லுற்றழிந்தான்
சொற்புண்ட ரீகாக்கன் சோமேசா—பொற்பெண்ணி
இல்லாள்கட் டாழ்ந்த வியல்பின்மை யெஞ்ஞான்று
நல்லாரு ணாணுத் தரும்.

கூஉ வரைவின்மகளிர்

வேண்டு முருப்பசியைப் பார்த்தன் வெறுத்தனனே
தூண்டு மறைப்பரியாய் சோமேசா—யாண்டும்
பொதுநலத்தார் புன்னலந் தோயார் மதிநலத்தின்
மாண்ட வறிவி னவர்.

கஙூ கள்ளுண்ணாமை

தக்கன்பா ஞானத் ததீசியுப தேசமெல்லாந்
தொக்கதனு லானதென்னே சோமேசா—மிக்குக்
களித்தானைக் காரணங் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று.

கச சூது

முற்பணயத் தாற்பின்னு மூண்டிழந்தார் சூதரொடு
சொற்படுஞ்சூ தாடினேர் சோமேசா—அற்பமாம்
ஒன்றெய்தி நூறிழக்குஞ் சூதர்க்கு முண்டாங்கொல்
நன்றெய்தி வாழ்வதோ ராறு.

கரு மருந்து

நல்ல திலகவதி யார்மொழியை நம்பிவெந்நோய்
சொல்லரசர் தீர்ந்துய்ந்தார் சோமேசா—புல்லிய
நோய்நாடி நோய்முத னாடி யதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.

கசா குடிமை

மங்கலியம் விற்றும் வழாதுபணி செய்துவந்தார்
துங்கமறை தோர்கலயர் சோமேசா—வங்கண்
வழங்குவ துளவீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பிற் றலைப்பிரித லின்று.

கஎ மானம்

அச்சுவத்தா மாப்பட்டா னென்ன வமர்துறந்தான்
றுச்சி றுரோணனென்பான் சோமேசா—நச்சு
மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னா
ருயிர்நீப்பர் மானம் வரின்.

கூஅ பெருமை

தண்டி யடிகளிரு தாளிணைபே ணுதழிந்தார்
தொண்டராம் பேய்ச்சமணர் சோமேசா—மிண்டுஞ்
சிறியா ருணர்ச்சியு ளில்லைப் பெரியாரைப்
பேணிக்கொள் வேமென்னு நோக்கு.

கூகூ சான்றாண்மை

வன்மைச் சுயோதனற்கும் வானோர் சிறைமீட்டான்
றன்மை நெறித்தருமன் சோமேசா—பன்முறையும்
இன்னுசெய் தார்க்கு மினியவே செய்யாக்கா
லென்ன பயத்ததோ சால்பு.

ா பண்புடைமை

உன்பணிக்கென் றேதிநல்காச் செல்வ முததியுறத்
துன்பமுற்றார் நால்வணிகர் சோமேசா—வன்புமிகும்
பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வ நன்பால்
கலந்தீமை யாற்றிரிந் தற்று.

ாக நன்றியில்செல்வம்

எல்லா மறையவர்க்கீந் தேவறியன் போலானுன்
சொல்லாருங் கீர்த்திரகுச் சோமேசா—நல்லதே
சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி
வறங்கூர்ந் தனைய துடைத்து.

ாஉ நாணுடைமை

புண்ணோ டுயிர்வாழ நாணியுயிர் போக்கினுன்
றுண்ணெனவே வாலிமுனஞ் சோமேசா—எண்ணியிடில்
நாணா லுயிரைத் துறப்ப ருயிர்ப்பொருட்டா
னுண்டுறவார் நாணாள் பவர்.

ரக குடிசெயல்வகை

மற்றிருத ராட்டிரன்சர் தானமெலா மாய்ந்ததே
சுற்றுநீர்த் தென்குளத்தூர்ச் சோமேசா—பற்றும்
இடுக்கண்கால் கொன்றிட வீழு மடுத்தூன்று
நல்லா ளில்லாத குடி.

ரச உழவு

வேள்வித் தொழிற்கு முழுதொழின்முன் வேண்டுமால்
சூழிரும் தென்குளத்தூர்ச் சோமேசா—வாழும்
உழவினர் கைம்மடங்கி னில்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கு நிலை.

ரரு நல்குரவு

நற்றருமன் வெற்றியினை நாடி விராடனெதிர்
சொற்றமொழி சோர்ந்ததே சோமேசா—கற்றறிவால்
நற்பொரு ணன்குணர்ந்து சொல்லினு நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும்.

ரசு இரவு

கஞ்சாறர் சோபனப்பெண் கூந்தல் கடிதளிக்கத்
துஞ்சு மகிழ்ச்சிகொண்டாய் சோமேசா—நெஞ்சின்
இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ள
முள்ளு ளுவப்ப துடைத்து.

ரஎ இரவச்சம்

எண்ணெயிரப் பஞ்சியுட லேவருத்தித் தீபமிட்டார்
தண்ணென் கணம்புல்லர் சோமேசா—கண்ணியிடில்
ஆவிற்கு நீரென் றிரப்பினு நாவிற்
கிரவி னிளிவந்த தில்.

௯அ கயமை

ஏற்ற துரோணனையன் றெள்ளித் துருபதன்பின்
ளேற்றுவிச யற்களித்தான் சோமேசா—போற்றிடினும்
ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்குங்
கூன்கைய ரல்லா தவர்க்கு.

௯கூ தகையணங்குறுத்தல்

வாய்ந்ததம யந்தியுரு மாணலங்கண் டின்புற்றான்
ளேய்ந்தபுக ழாளுநளன் சோமேசா—ஆய்ந்துரைக்கின்
உண்டார்க ணல்ல தடுநறாக் காமம்போற்
கண்டார் மகிழ்செய்த லின்று.

௯ய குறிப்பறிதல்

காங்கேயன் வேண்ட வெறுத்துரைத்தாள் கானவர்மின்
றாங்கா வளக்குளத்தூர்ச் சோமேசா—ஆங்கண்
உறாஅ தவர்போற் சொலினுஞ் செறாஅர்சொ
லொல்லை யுணரப் படும்.

௯கக புணர்ச்சிமகிழ்தல்

மெய்த்தவத்தைக் காசிபனும் விட்டொழிந்து மாயைபாற்
சுத்தமனம் வைத்தானே சோமேசா—இத்தலத்தில்
தாம்வீழ்வார் மென்றோட் டுயிலி னினிதுகொ
றாமரைக் கண்ணா னுலகு.

௯கஉ நலம்புனைந்துரைத்தல்

ஈன்றான் றிலோத்தமையை யிச்சிக்கி லாங்கவண்மெய்
தோன்றுமெழி லென்சொல்வேன் சோமேசா—வான்ற
முறிமேனி முத்த முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு.

௱கங காதற்சிறப்புரைத்தல்

கானடந்துஞ் சீதைகலப் பாற்களித்தான் பின்னயர்ந்தான்
றாசீ ரயோத்தியர்கோன் சோமேசா—ஆனதனுல்
வாழ்த லுயிர்க்கன்ன ளாயிழை சாத
லதற்கன்ன ணீங்கு மிடத்து.

௱கச நாணுத்துறவுரைத்தல்

காம மிகவுழந்துந் தூதைக் கடிந்துவிட்டாள்
சோம னுதற்பாவை சோமேசா—வாமே
கடலன்ன காம முழந்து மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில்.

௱கரு அலரறிவுறுத்தல்

ஓர்நா ளகலியையை வேட்டின்று மும்பரிறை
சோராப் பழிபூண்டான் சோமேசா—ஆராயிற்
கண்டது மன்னு மொருநா ளலர்மன்னுந்
திங்களைப் பாம்புகொண் டற்று.

௱கசூ பிரிவாற்றுமை

வாழ்விழந்த வின்னலினும் வாசவர்கோன் மிக்குநொந்தான்
சூழ்சசியை முன்பிரிந்து சோமேசா—வீழ்வார்கட்
கின்னு தினனில்லூர் வாழ்த லதனினு
மின்னு தினியார்ப் பிரிவு.

௱கஎ படர்மெலிந்திரங்கல்

இன்பமுற்றுன் மாயைதோ டோய்ந்துபின் னெண்மடங்கு
துன்பமுற்றுன் காசிபன்றுன் சோமேசா—அன்புடையார்க்
கின்பங் கடன்மற்றுக் காம மஃதடுங்காற்
றுன்ப மதனிற் பெரிது.

௩௧அ கண்விதுப்பழிதல்

தாதையன் றித் தானேதுச் சந்தனேச்சேர்ந் தின்னலுற்றாள்
சூதில் சகுந்தலைதான் சோமேசா—வோதிற்
கதுமெனத் தாநோக்கித் தாமே கலுழு
மிதுநகத் தக்க துடைத்து.

௩௧௯ பசப்புறுபருவரல்

கேழ்வரைச் சேடியர்சொல் கீழ்மைக் கியற்படுஞ்சொற்
சூழ்பமின்னார் துன்பத்துஞ் சோமேசா—தாழ்வில்
பசப்பெனப் பேர்பெறுத னன்றே நயப்பித்தார்
நல்காமை நாற்றா ரெனின்.

௩௨0 தனிப்படர்மிகுதி

பன்முனிவர் பன்னியர்கள் பண்டுன்னைக் காமுறவுந்
துன்னியருள் செய்திலையே சோமேசா—வன்னதே
தாங்காதல் கொண்டார் நமக்கெவன் செய்பவோ
தாங்காதல் கொள்ளாக் கடை.

௩௨௧ நினைந்தவர்புலம்பல்

தன்னையே யுன்னுந் தமயந்தி மாதைநளன்
றன்னார்போ னீத்திருந்தான் சோமேசா—அன்னதே
தந்நெஞ்சத் தெம்மைக் கடிகொண்டார் நாணார்கொ
லெந்நெஞ்சத் தோவா வரல்.

௩௨௨ கனவுநிலையுரைத்தல்

அல்லமனை மாயை கனவி லணைந்ததனாற்
சொல்லரிய வின்பமுற்றாள் சோமேசா—நல்ல
நனவினாற் கண்டதூஉ மாங்கே கனவுந்தான்
கண்ட பொழுதே யினிது.

௧௨௩ பொழுதுகண்டிரங்கல்

வானவர்கோன் காமநோய் மாலைவர மிக்கதே
ஆனீர்ப் புளினத்திற் சோமேசா—வானதே
காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய்.

௱௨௪ உறுப்புநலனழிதல்

ஓதாநா ளோதுகலை யொத்திளைத்தாள் சீதையென்றான்
கூதாரா வான்மீகி சோமேசா—கோதில்
பணைநீங்கிப் பைந்தொடி சோருந் துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள்.

௱௨௫ நெஞ்சொடுகிளத்தல்

அன்பன் றுறப்பவு நாளா யனிதேடித்
துன்பந் தலைக்கொண்டான் சோமேசா—முன்பே
இருந்துள்ளி யென்பரித னெஞ்சே பிரிந்துள்ளல்
பைதனோய் செய்தார்க ணில்.

௱௨௬ நிறையழிதல்

கோற்றொடிவிற் பாய்போன்று கூடல் வணிகமின்னார்
தோற்று நிறையழித்தாய் சோமேசா—சாற்றுங்காற்
பன்மாயக் கள்வன் பணிமொழி யன்றோநம்
பெண்மை யுடைக்கும் படை.

௱௨௭ அவர்வயின்விதும்பல்

சந்திரசே னன்வரவு நோக்கியுயிர் தாங்கினளாற்
சுந்தரசீ மந்தனிதான் சோமேசா—முந்தும்
உரனசைஇ யுள்ளந் துணையாகச் சென்றார்
வரனசைஇ யின்னு முளேன்.

ாஉஅ குறிப்பறிவுறுத்தல்

சங்கிலிபா லாரூர ரூழிகணந் தானுகத்
தங்கமிகு மன்புவைத்தார் சோமேசா—பொங்கப்
பெரிதாற்றிப் பெட்பக் கலத்த லரிதாற்றி
யன்பின்மை சூழ்வ துடைத்து.

ாஉகூ புணர்ச்சிவிதும்பல்

யோசனை கந்தியினைக் காண்டலும்பே ரோகைகொண்டான்
றாசணையாச் சந்தனுத்தான் சோமேசா—நேசமுடன்
உள்ளக் களித்தலுங் காண மகிழ்தலுங்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு.

ாங0 நெஞ்சொடுபுலத்தல்

விக்கிரமன் மற்றொருத்தி வேட்கையுற்றுந் தேடிநொந்தாள்
தொக்க வுருப்பசிமின் சோமேசா—வொக்கும்
அவர்நெஞ் சவர்க்காதல் கண்டு மெவனெஞ்சே
நீயெமக் காகா தது.

ாஙக புலவி

கொண்ட பரவை கொடும்புலவி யெல்லாம்வன்
றொண்டர்க்குப் பேரழகே சோமேசா—தண்டா
நலத்தகை நல்லவர்க் கேஎர் புலத்தகை
பூவன்ன கண்ணு ரகத்து.

ாஙஉ புலவிநுணுக்கம்

சீவகன் மஞ்சரியைத் தாழ்த்துரைப்பச் சீறினளே
தூவாய்க் குணமாலை சோமேசா—வாவகையே
தன்னை யுணர்த்தினுங் காயும் பிறர்க்குநீ
ரிந்நீர ராகுதி ரென்று.

ரகக ஊடலுவகை

காயும் புலவியில்வன் ளுண்டார் கடைப்பட்டுத்
தோயுமின்பின் மேலானூர் சோமேசா—ஆயுங்கால்
ஊடலிற் ளுேற்றவர் வென்ரு ரதுமன்னுங்
கூடலிற் காணப் படும்.

அருஞ்சொற்பொருளகரவரிசை

எண், செய்யுளெண்

எ

எவன் - என், ௰

எள்ளாது - இகழாது, கஉ

எனல் - என்று சொல்லற்க; என்று சொல்லுக, உ௰

எனைத்தொன்றும் - யாதொன்றையும், உக

ஏ

ஏக்குற்றார்-ஏக்கமடைந்தார்,௬௬

ஏந்திய - உயர்ந்த, ௬௰

ஏர் - அழகான, உஎ

ஒ

ஒட்டலன் - பகைவன், க௬

ஒரீஇ - நீங்கி, அ௰

ஒல்லா - முடியா, கச

ஒல்லும் - கூடுமான, அஉ

ஒல்லை - விரைவில், அ௩

ஒற்கம் - தளர்ச்சி, சஉ

ஒறாது - ஒறுக்காது, க௬

ஒன்னார் - பகைவர், கஎ

ஓ

ஓகை - மகிழ்ச்சி, கஉக

ஓம்பல் - காக்க, ௬௫

ஓம்புக - அடக்குக, அஎ

ஓம்புவான் - விரும்புவான், ௬

ஓரில் - ஆராயில், க

ஓவா - ஒழியாமல், கஉக

க

கசடு - குற்றம், எஉ

கடி - காவல், கஉக

கடை - இழிவு; ௩ச

கடைப்பட்டு - தோற்று, க௩௩

கண் - கண்ணோட்டம், ௯எ

கண்ணியிடில்-ஆராய்ந்தால், ௱எ

கதம் - சினம், ௯௰

கதுமென - திடீரென்று, ககஅ

கரந்தும் - மறைந்தும், அ

கரவு - மறைப்பு, ௭க

கலுழும் - அழும், ககஅ

கவின் - அழகு, கஉச

கா

காயும் - சினக்கும், க௩உ

கால்-காற்று, ௬ச; முதல், ௱௩

கி

கிழத்தி - மனைவி, உஅ

கு

குளவளா - குளப்பரப்பு, ௯உ

குற்று - குத்து, உக

கூ

கூறை - உடை, உக

கூர்த்த - மிகுந்த, உ௯

கெ

கெழுதகைமை - உரிமை, எ௰

கே

கேண்மையவர் - நட்பினையுடையார், அக

கேழ்வர்-கேள்வர்,கணவர்,கக௬

கை

கைத்து - கையிலுள்ளது, எ௬

கைப்ப - கசப்பெடுக்க, விரும்பாதிருக்கவென்றபடி, ௩௬

கொ

கொடிறு - தாடை, ௱அ

கொண்மூ - மேகம், ௬

கொன் - பெருமை, ௬௰

கோ

கோடாமை - கோணாமை, கஉ

கோடு - கரை, ௯உ; கொம்பு, ௬௰.

கோது - குற்றம், கஉச.

கோல் - திரட்சி, கஉ௬

ச

சடிலம் - சடை, க

சாடும் - அழிக்கும், ௬௬

சா
சால்பு - பெருந்தன்மை, ௧௬
சாலும் - போதும், ௧௭
சு
சுரர் - தேவர், ௫௨
சூ
சூடும் - மேற்கொள்ளும், ௭
சூர்த்திறம் - சூரத்தனம், ௨௫
சூரம் - வீரம், ௪௪
சூழ்வது - நினைவது, ௧௨௮
சூழற்க - எண்ணற்க, ௨௧
சூழி - குளம், ௯௪
செ
செயல் - செய்க, ௬௮
செருக்கு - செல்வம், ௮௬
சென்னி - தலை, ௩
சே
சேய் - மகன், ௬௪
சொ
சொல்லேருழவர் - பகைவர், ௮௮
சொற்றது - சொன்னது, ௨௧
சொன்னம் - பொன், ௬
சோ
சோகாப்பர் - துன்புறுவர், ௧௩
சோமம் - திங்கள், ௧௧௪
த
தகர் - ஆட்டுக்கடா, ௪௬
தண்டா - நீங்காத, ௧௩௧
தமர் - தமக்குரியவர், ௪௫
தலை - சிறந்தவன், ௫
தா
தாளாண்மை - முயற்சி, ௬௨
தி
திறல் - வலி, ௬௭
து
துங்கம் - உயர்ச்சி, ௬௰
துச்சன் - இழிந்தோன், ௨௬
துணை - அளவு, ௧௧
துப்பு - பழக்கவறிவு, ௫௪; வலிவு, ௭௧
துய்த்த - நுகர்ந்த, ௪௧
துரீஇ - தேடுதல், ௬௩
துவ்வாத - தூய்மையடையாத, ௬௭
துறப்பர் - நீக்குவர், ௯௨
துன் - பொருந்திய, ௧௮
துன்னார் - பகைவர், ௧௨௧
துன்றிய - மிக்க, ௪௩
துனி - வறுமை, ௯௧
தூ
தூ - தூய்மையான, ௧௬
தூக்கி - கருதி, ௩௪
தூசு - குற்றம், ௨௪; ஆடை, ௮௩
தே
தேரர் - புத்தர், ௭௩
தேரான் - ஆராயாமல், ௫௧
தேறிய - தெளிந்த, ௫௨
தெ
தொடி - வளையல், ௧௨௬
தொல் - பழமை, ௫
தோ
தோடு - இதழ், ௫௰
தோம் - குற்றம், ௭௰
தோயும் - உளமார நுகரும், ௧௩௩
தோலா - தோலாமல், ௫௮
ந
நகல் - நட்பு, ௮௬
நச்சும் - விரும்பும், ௬௭
நசைஇ - விரும்பி, ௧௨௭
நடு - நடுநிலைமை, ௧௮
நயப்பித்தார் - விருப்பமாக்கினார், ௧௧௬
நயன் - ஒப்புரவு, ௨௨

மா

மாண்ட-மாட்சிமைப்பட்ட, ௯௨
மாற்றார் - பகைவர், ௮௯

மி

மின்-மின்போன்ற மாது, ௧௩௰

மீ

மீனவன் - பாண்டியன், ௩௨

மு

முறி - தளிர், ௧௧௨
முறுவல் - பல், ௧௧௨

மூ

மூண்டு-ஊக்கத்துடன் நின்று, ௩௮

மே

மேக - விரும்புக, ௮௭

மை

மைந்து - சிறப்பு, ௫௬

வ

வடு - பழி, ௫௫
வண்ணம் - நிறம், ௩௫
வல் - விரைவு, ௫௯
வழாது - தவறாது, ௯௬
வழுக்கியும் - மறந்தும், ௧௪;
ஒழிந்தும், ௧௭
வறம் - வறட்சி, ௱௧
வன்கண்மை - பகைமை, ௨௫

வா

வாசவர் - தேவர், ௧௧௯
வாய்ப்ப - பொருந்த, ௯௫
வாய் - வழி, ௯௫
வாய்மை - உண்மை, ௩௰

வி

விதிரார் - தெறியார், ௱௮
வியன் - அகன்ற, ௨
வினை - தொழில், ௩௩

வீ

வீந்தான் - இறந்தான், ௫௭
வீழ்வார் - விரும்புவார், ௧௧௧
வீறு - பெருமை, ௭௮

வெ

வெஃகின் - விரும்பினால், ௧௮
வெய்து - கடிய, ௫௭
வெறி - மணம், ௧௧௨

வே

வேட்டான் - விரும்பினான், ௪௯
வேட்டு - விரும்பி, ௧௫
வேண்டாமை-விரும்பாமை, ௩௭
வேய் - மூங்கில், ௧௧௨

வை

வை - வைக்கோல், ௪௪
வைகல் - நாள், ௧
வைத்தூறு - வைக்கோற்போர், [௬௪

மேற்கோட்கதை விளக்கம்

செய்யுளெண்	கதை	நூல்
உ	புகழ்த்துணையார் வறுமையினுங் கடமை தவறாமை,	திருத்தொண்டர் புராணம்.
௩	சம்பந்தர் புத்தன் தலையைத் துமித்தது,	திருத்தொண்டர் புராணம்.
ச	தக்கன் வேள்வி அறமின்றி யழிந்தமை,	கந்தபுராணம்.
ரு	தருமர் இல்வாழ்ந்தது,	உபதேச காண்டம்.
சு	அனசூயை மழை பெய்வித்தது,	இராமாயணம்.
எ	சம்பந்தர் மூவாண்டிற் பாடினமை,	திருத்தொண்டர் புராணம்.
அ	நளன், மக்களைக் கண்டு கண் துளித்தது,	நளவெண்பா.
கூ	பொன்னனையாள் விருந்தோம்பியது,	திருவிளையாடல்.
௰	இராமன் பரசுராமனுக்கு இன்சொல் கூறல்,	இராமாயணம்.
கக	ஔவை 'அசதிக்கோவை' பாடினமை,	புலவர் புராணம்.
கஉ	தடுத்தாட் கொண்டமையை வெண்ணெய் நல்லூர் அந்தணர் புகழ்ந்தது,	திருத்தொண்டர் புராணம்.
க௩	வியாசர் 'நாராயணனே பர'னென்றது,	காசி காண்டம்.
கச	சிசுபாலனைக் கண்ணன் தீது சொல்லாமை,	பாகவதம்.
கரு	இராவணன் சீதையை விரும்பிப் பழியுற்றது,	இராமாயணம்.
கசு	மெய்ப்பொருணாயனார் பகைவனை 'நம'ரென்றது,	திருத்தொண்டர் புராணம்.
கஎ	சமணர் பொறாமையாற் கழுவேறியது,	திருத்தொண்டர் புராணம்.

௧அ அங்கநாட்டரசன் கடவுள் பொருளை வெளவியது, உபதேசகாண்டம்.

௧௯ கூனியின் கோட்சொல், இராமாயணம்.

௨௰ சேக்கிழார் சிந்தாமணிப் பயிற்சியைப் பயனில்லையென்றது, சேக்கிழார் புராணம்.

௨௧ இளையான்குடிமாறர் மனைவியார் பழைய நினைவை எண்ணி நொந்தது, திருத்தொண்டர் புராணம்.

௨௨ இயற்பகையார் இரந்தவர் இன்முகங் கண்டமை, திருத்தொண்டர் புராணம்.

௨௩ போசன் புலவர்க்கு ஈந்தது, —

௨௪ மூர்த்தி நாயனர் சிறந்து வடுகரசன் அழிந்தமை, திருத்தொண்டர் புராணம்.

௨௫ சூரன் வானேரை மீன்சுமப்பித்தது, கந்தபுராணம்.

௨௬ சம்பந்தர் சோதியுள் தவமுடையார் புகுந்தமை, திருத்தொண்டர் புராணம்.

௨௭ திருமால் கரவுகோலத்தால் பிருந்தையை நுகர்ந்தது, இலிங்க புராணம்.

௨௮ விசுவாமித்திரன் நாய்வால் களவாடினமை, —

௨௯ சிறுத்தொண்டர் நன்மையான பொய் சொன்னது, திருத்தொண்டர் புராணம்.

௩௰ அப்பர் பல்லவனைச் சினவாமை, திருத்தொண்டர் புராணம்.

௩௧ கூன்பாண்டியன் தீயிடுவித்து நோயுழந்தமை ,,

௩௨ மனுச்சோழன் மகனுக்காக அவனமைச்சன் உயிர் விட்டமை, திருத்தொண்டர் புராணம்.

௩௩ சூரன் அண்டங்களை நிலையென வெண்ணி யழிந்தமை, கந்தபுராணம்.

௩௪ கோவணம் விரும்பித் துறவி குடித்தனங்கட்டினமை, —

௩௬ அப்பர் அரம்பையராலும் பொன்னாலும் மயங்காமை,
திருத்தொண்டர் புராணம்.

௩௮ அப்பர் அமண்மதத்திலிருந்து சைவம் புகுந்தமை,
திருத்தொண்டர் புராணம்.

௩௯ இராமன் சீதையை ஐயுற்றுச் சீறுமை, இராமாயணம்.

௪௰ அப்பரும் சம்பந்தரும் அளவளாவுதல்,
திருத்தொண்டர் புராணம்.

௪௧ திருவள்ளுவர் சங்கப் புலவரை வென்றமை, —

௪௨ கண்ணப்பர் கண்ணப்பினமை, திருத்தொண்டர் புராணம்.

௪௩ சம்பந்தர் சமணர் தீக்கு அஞ்சினு ரென்பது,
திருத்தொண்டர் புராணம்.

௪௪ வருவதறியாமையால் இராவணன் பொருது மாண்டமை,
இராமாயணம்.

௪௫ ஆரூரர் ஏயர்கோன் நட்பை விரும்பினமை,
திருத்தொண்டர் புராணம்.

௪௬ நெடுமாறன் தன் தேவி சொல்கேட்டு வெப்பு நோய் தீர்ந்தமை, திருத்தொண்டர் புராணம்.

௪௭ இராவணன் சீதையை விரும்பி உயிர் நீங்கினன்,
இராமாயணம்.

௪௮ சலந்தரன் சக்கரமெடுத்து மாண்டமை, இலிங்கபுராணம்

௪௯ வீமன் கீசகனைக் கண்டும் ஒடுங்கியிருந்தமை, பாரதம்.

௫௰ காஞ்சிபுரத்தில் முயல் யானையை வருத்தியது,
காஞ்சிப்புராணம்.

௫௧ சூரியசன்மா ஆனந்தனை நண்பனாய்த் தெளிந்து பழியடைந்தமை, உபதேச காண்டம்.

௫௨ விச்சவவுருவன் இந்திரனுக்குத் தீங்கு செய்தமை,
திருவிளையாடற் புராணம்.

௵௩ இராவணன் விபீடணனோடு அளவளாவாமையால் வாழ் விழந்தமை, இராமாயணம்.

௵௪ முப்புரமெரித்தபோது மூவர் பிழைத்தமை, காஞ்சிப் புராணம்.

௵௫ சகரன், மைந்தனெனுமல் வெறுத்தது, இராமாயணம்.

௵௬ திரோபதை கண்ணீர் கண்டு பீஷ்மர் அஞ்சியது, பாரதம்.

௵௭ சிசுபாலன் வன்சொல்லால் இறந்தது, பாரதம்.

௵௮ சிவபிரான் வானவர் தீங்கும் பொறுத்து நஞ்சுண்டமை, காஞ்சிப்புராணம்.

௵௯ சிவபிரான் மீனவற்குப் பழியறிவித்தது, திருவிளையாடற் புராணம்.

௬0 எறிபத்தர் யானையை வீழ்த்தியது, திருத்தொண்டர் புராணம்.

௬௧ சோழன் இமயமலையிற் புலியைப் பொறித்தது, —

௬௨ கூற்றுவநாயனர் மூவேந்தரையும் முயற்சியால் வென் றமை, திருத்தொண்டர் புராணம்.

௬௩ அதிபத்தர் மீன் பிடித்தலில் தளர்வுறாமை, திருத்தொண்டர் புராணம்.

௬௪ ஆஞ்சநேயன் சுக்கிரீவனுக்கு முடிசூட்டுவித்தமை, இராமாயணம்.

௬௫ கும்பகர்னன் சொற்சோர்வால் தூக்கம்பெற்றது, இராமாயணம்.

௬௬ தக்கன் வேள்வியழிவுக் கிரங்கியது, கந்தபுராணம்.

௬௭ சூரன் முருகரைக் குழந்தையென் றெண்ணி யழிந்தமை, கந்தபுராணம்.

௬௮ இராவணன் ஆராயாது கயிலைமலையைத் தூக்கி யழிந்தமை, கூர்மபுராணம்.

௬௯ நிடதன் உண்மையாய்த் தூது சென்றமை, நைடதம்.

௭௰ தக்கன் சிவனுக்கு உறவு கருதிக் குற்றமுற்றமை, கந்தபுராணம்.

௭௧ அப்பர், அப்பூதியார் மகன் இறப்பை யறிந்தது, திருத்தொண்டர் புராணம்.

௭௨ சங்கத்தார் உருத்திரசன்மரைக் கொண்டு உரைதேறியது, களவியலுரை.

௭௩ திருவாதவூரர் புத்தரை வென்றது, திருவாதவூரர் புராணம்.

௭௪ வீரமகேந்திரம் சூரன் தகவின்மையால் அழிந்தது, கந்தபுராணம்.

௭௫ சோழனால் அதிகன் அரண் அழிந்தது, திருத்தொண்டர் புராணம்.

௭௬ உக்கிரகுமார பாண்டியன் பொருள் பெற்றமை, திருவிளையாடற் புராணம்.

௭௭ சிவபிரான் முப்புர மெரித்தமை, காஞ்சிப்புராணம்.

௭௮ காமன் சிவனுக்குத் தோற்றுப் புகழுற்றது, கந்தபுராணம்.

௭௯ அப்பர், சம்பந்தர் மதுரைக்குப் புறப்பட்டமையைத் தடுத்தது, திருத்தொண்டர் புராணம்.

௮௰ சுசீலன் புயபலனென்னும் அரசனை நீங்கியது, உபதேசகாண்டம்.

௮௧ திருநீலகண்டர் அன்பு குன்றாமை, திருத்தொண்டர் புராணம்.

௮௨ தசரதன் கைகேசியின் சொல்லால் இறந்தமை, இராமாயணம்.

௮௩ துரியோதனன் சகுனி சொற்கேட்டது தீதானமை, பாரதம்.

௮௪ அப்பர்க்குச் சமணரின் பிரிவு துன்பந் தராமை, திருத்தொண்டர் புராணம்.

௮௫ சலந்தரன், மனைவி சொல்லையுங் கேளாமல் தானுந் தெளியாமல் அழிந்தமை, இலிங்க புராணம்.

அசு பகைமையால் துரியோதனன் கெட்டது, பாரதம்.

அஎ காமன் சிவபிராைேடு எதிர்த்து ஒழிந்தமை, கந்தபுராணம்.

அஅ நந்தி கலம்பகத்தான் மாண்டது, —

அகூ வீரபாண்டியன் மகன் பகையால் நலமிழந்தமை,
திருவிளையாடற் புராணம்.

கூ௰ கோசிகர் சீற்றத்தால் நால்வேந்தர் துன்பமுற்றது,
உபதேச காண்டம்

கூக புண்டரீகாக்கன், அழகுக்காகக் கற்பிலாத மனைவியை விரும்பினது, உபதேச காண்டம்.

கூஉ அர்ச்சுனன் உருப்பசியை வெறுத்தது, பாரதம்.

கூங ததீசிமொழி தக்கன்பாற் பயன்படாமை, கந்தபுராணம்.

கூச திலகவதியார் மொழியை நம்பி அப்பர் நோய் தீர்ந்தமை,
திருத்தொண்டர் புராணம்.

கூரு கலயனார் மணவணி விற்றும் பணிசெய்தமை,
திருத்தொண்டர் புராணம்.

கூஎ துரோணர் அசுவத்தாமா இறப்பை நினைந்து அமர்
துறந்தமை, பாரதம்.

கூஅ சமணர் தண்டியடிகளைப் போற்றாதழிந்தமை,
திருத்தொண்டர் புராணம்.

கூகூ தருமர் சுயோதனனைச் சிறைமீட்டமை, பாரதம்.

௱ விசுவவசுவின் மக்கள் திருப்பணி மறுத்துத் துன்பமுழந்தமை, உபதேச காண்டம்.

௱க இரகுமன்னன் கொடுத்து வறிஞனானமை, இரகுவமிசம்.

௱உ வாலி நாணி உயிர்நீத்தமை, இராமாயணம்.

௱ங திருதராட்டிரன்கால்வழி மாண்டமை, பாரதம்.

௱ச தருமர் சொல்லும் விராடனெதிரில் மதிப்பற்றமை, பாரதம்.

௱ரு கஞ்சாறர் சிவனார்க்குக் கூந்தல் தந்தமை,
திருத்தொண்டர் புராணம்.

௱எ கணம்புல்லர் உடம்பை வருத்தியேனும் விளக்கிட்டமை,
திருத்தொண்டர் புராணம்.

௱அ. துருபதன் துரோணற்கு அளிக்காமல் விசயற்களித்தமை, பாரதம்.
௱கூ நளன் தமயந்தியுருவங் கண்டு மகிழ்ந்தது. நைடதம்.
௱௰ வள்ளி முருகனை முதலில் வெறுத்துப் பேசினமை, கந்தபுராணம்.
௧௧௧ காசிபர் மாயை யென்பவளை விரும்பியது. கந்தபுராணம்.
௧௧௨ ஈன்ற நான்முகனே திலோத்தமையை விரும்பியது, அருணாசல புராணம்.
௧௧௩. இராமன் சீதையைக் கூடியும் பிரிந்தும் வருந்தியது, இராமாயணம்.
௧௧௪ பரவை தூதைக் கூடிந்துவிட்டமை, திருத்தொண்டர் புராணம்.
௧௧௫ இந்திரன் அகலிகையை விரும்பிப் பழிபூண்டது, இராமாயணம்.
௧௧௬ இந்திரன் சசியைப் பிரிந்து வருந்தியது, கந்தபுராணம்.
௧௧௭ காசிபன் மாயையை நினைந்து பின்பு வருந்தியது, கந்தபுராணம்.
௧௧அ சகுந்தலை துச்சந்தனை நினைந்து அழுதது, பாரதம்.
௧௨௰ சிவன் முனிவர்களின் மனைவிமார் விருப்பத்துக்கு இணங்காமை, கந்தபுராணம்.
௧௨௧ நளன் தமயந்தியைப் பிரிந்திருந்தமை, நைடதம்.
௧௨௨ மாயை யென்பவள் அல்லமதேவனைக் கனவிற் கண்டு வருந்தினமை, பிரபுலிங்கலீலை.
௧௨௩ இந்திரன் காமம் மாலைப்போது வரவர மிக்கது, கந்தபுராணம்.
௧௨௪ சீதை கவின் வாடியதை வான்மீகி சொன்னது, இராமாயணம்.
௧௨௫ நளாயனி தன் தலைவனைத் தேடி வருந்தியது, பாரதம்.
௧௨௬ சிவனார் வளையல் விற்றுப் பெண்களை மயக்கியது, திருவிளையாடற் புராணம்.

கஉஎ சீமந்தனி சந்திரசேனன் வரவுநோக்கி உயிர் தாங்கினமை,
பிரமோத்திர காண்டம்.

கஉஅ ஆரூரர் சங்கிலிபால் அன்பு வைத்தமை,
திருத்தொண்டர் புராணம்.

கஉகூ சந்தனு பரிமளகந்தியைக் கண்டு மகிழ்ந்தமை, பாரதம்.

கஙo உருப்பசி விக்கிரமனைத் தேடி நொந்தது,
விக்கிரமோர்வசீயம்.

கஙக பரவையாருடல் ஆரூரர்க்கு ஓரழகா யிருந்தது,
திருத்தொண்டர் புராணம்.

கஙஉ சீவகன் சுரமஞ்சரியை யிழிப்பக் குணமாலை சிறியது,
சிந்தாமணி.

கஙங பரவையாருடலில் வன்றொண்டர் தோற்று மகிழ்வெய்தி
னமை, திருத்தொண்டர் புராணம்.

பாட்டு முதற்குறிப் பகராதி